## கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி

## S.C.No.56/2020

2024 ஆம் வருடம் நவம்பர் மாதம் 04 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10-வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ராமசாமி (அ.சா.10) | தொழில் | : | விவசாயம் மற்றும் ஆடு மேய்த்தல் |
| த/பெ., க/பெ. | : | திரு.பெருமாள் | வயது | : | 75 |
| கிராமம் | : | பழைய ஆயக்குடி | இனம் | : | ஆண் |
| தாலுகா | : | பழனி | நாள் | : | 04.11.2024 |
| மாவட்டம் | : | திண்டுக்கல் | | | |

1ம் எதிரி முன்னிலையாகியுள்ளனர்.

2ம் எதிரி முன்னிலையாகவில்லை. அதற்கான மனு ஏற்கப்பட்டது.

<u>முதல் விசாரணை :- (சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

நான் பழைய ஆயக்குடியில் குடியிருந்து விவசாயம் செய்தும், ஆடு மேய்த்தும் வருகிறேன். 2ம் எதிரி குட்டி என்ற சுகுமாறனை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மேலும் என்னிடம் காட்டப்படும் 2வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். 04.04.2018 அன்று நாங்கள் ஆயக்குடியில் இருந்தோம். எனது மகன் கிருஷ்ணசாமியை குத்திவிட்டதாக தகவல் வந்தது. நானும், நாட்டுத்துரையும் பழனி அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தோம். காக்கி சட்டையில் ரத்தக்கறை இருந்தது. அந்த சட்டையை போலீசார் எடுத்துக் கொண்டார்கள். காவல்நிலையத்தில் எங்களை ஒப்புதலுக்கு கையெழுத்து போடச்சொன்னார்கள். நான் கையொப்பமிட்ட அத்தாட்சி மற்றும் ஒப்புதலில்

என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு வேண்டுகோளை ஏற்று சாட்சியை பகுதி அளவில் பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை கடந்த 04.04.2018ம் தேதி மாலை சுமார் 7–1/4 மணிக்கு காவல்நிலையத்தில் இருந்த 2ம் எதிரி குட்டி என்ற சுகுமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எங்கள் ஊரைச்சேர்ந்த நாட்டுத்துரை என்பவரும், நானும் சாட்சி கையொப்பமிட்டோம் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை :–</u>** எங்களுக்கு தகவல் வந்தபோது மாலை 7.00 மணி இருக்கும். இரவு 8.00 மணிக்கு முன்பாகவே நாங்கள் வந்துவிட்டோம்.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2024.11.04 19:13:08 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
பழனி.